SriLankan Airlines

oneworld

## துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை

**கொள்வனவு இலக்கம் : ENG/ALC/RFP/23/03**

**ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் ஐந்து (5) அகலமான பருமனைக் கொண்ட விமானங்களை இயக்கும் குத்தகை முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (எஸ்எல்ஏ)**

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையியல் கொள்முதல் குழுவின் தலைவரால், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக, 2023 மார்ச் 13 ஆம் திகதி முதல் அந்தந்த **'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.ஃப்.பி)'** இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து பொருத்தமான விமானங்களை இயக்குவதற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக ஏலங்கள் கோரப்படுகின்றன. **'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.ஃப்.பி)'** தொடர்பான விடயங்கள் இலங்கை விமான நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (**https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices**) காணப்படுகின்றன.

சர்வதேச போட்டி ஏல (ஐசிபி) கொள்வனவு முறையினூடாக இலங்கை அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கமைய ஏலச் செயற்பாடு நடாத்தப்படும். சாத்தியமான விமானத்தை குத்தகைக்கு விடுவதற்காக சட்டபூர்வ உரிமைகளைக் கொண்ட அனைத்து ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த ஏலதாரர்களும், ஆர்.எ.ஃப்.பி. குறியீடான (ENG/ALC/RFP/23/03) என்பதைக் குறிப்பிட்டு 2023 மார்ச் 27 ஆம் திகதி இலங்கை நேரம் (GMT + 0530) 1400 மணிக்கு முன்பதாக **asset@srilankan.com** எனும் பாதுகாப்பான மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன்மூலம் தங்கள் ஏலங்களைச் சமர்ப்பிக்கலாம்.

ஆர்.எ.ஃப்.பி. யுடன் இணைக்கப்பட்டுள்ள ஏல ஒப்புகைப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, முறையாக கையொப்பமிடப்பட்டு **rfpinfo@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ஆர்.எ.ஃப்.பி. பற்றிய ஏதேனும் விசாரணைகள் அல்லது தெளிவுபடுத்தல்களை 2023 மார்ச் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **rfpinfo@srilankan.com** எனும் அதே மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய ஆர்.எ.ஃப்.பி. உடன் பின்னிணைப்பு மூலம் குறிப்பிடப்படாவிட்டால், ஏலங்கள் 2023 மார்ச் 27 திகதி அன்று இலங்கை நேரப்படி (GMT + 0530) 1415 மணிக்கு இலத்திரனியல் முறையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். ஏல திறப்பு நிகழ்வில் பங்கேற்க விரும்பும் தரப்பினர் ஏல திறப்பு திகதிக்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னர் **rfpinfo@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன் மூலம் தமது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.
ஆர்.எ.ஃப்.பி. தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் / அறிவித்தல்கள் எஸ்எல்ஏ இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காணப்படுகின்றன.

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு**
**துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**இலக்கம் 19, சைத்திய வீதி, கொழும்பு 01, இலங்கை.**